# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை பௌத்த விகாரை, தேவாலய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, யூலை மாதம் 06 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை பௌத்த விகாரை, தேவாலய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. (கூட்) 9/2005

### இலங்கை பௌத்த விகாரை தேவாலய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை பௌத்த விகாரை, தேவாலய மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது, எக்குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை பௌத்த விகாரை, தேவாலய மன்ற (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இலங்கைப் பௌத்த விகாரை தேவாலய மன்றத்தில் தற்போது உறுப்பினர்களாகவுள்ள அத்தகைய அத்தனை ஆட்களும் இத்தால் அமைக்கப்பெறும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தகைய ஆட்களும் (இது இதனகத்து இனிமேல் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பிடப்படும்) "இலங்கை பௌத்த விகாரை தேவாலய மன்றம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும் அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத்தொடரலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். இலங்கை பௌத்த விகாரை தேவாலய மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்பெறும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருக்குமென இத்தால் வெளிப்படுத்தப் படுகிறது :—

(i) பிக்குமாரின் கல்விக்கான உதவிகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(ii) தேவையான ஒரு பிக்கு அவரின் நியமன ஓலையைப் பெறுவதற்கும், அத்தகைய பிக்கு மரணமுறும்போது அவரது ஈமைக்கிரிகைகளை பொறுப்பேற்கின்ற ஆள் அல்லது ஒழுங்கமைப்புக்கு உதவுதல் ;

(iii) பௌத்த விகாரைகள், தேவாலயங்களைப் பழுதுபார்ப்பதற்கும் புதியவற்றை நிர்மாணிப்பதற்கும் பணவுதவி வழங்குதல் ;

(iv) வசதிகுறைந்த இடங்களில் அமைந்துள்ள விகாரைகளை மீள நிறுவுவதற்கு எனப் பொருத்தமான இடங்களைப் பெறுவதற்கு உதவுதல் ;

(v) சில் மாதாக்களின் கல்வியை முன்னேற்றுவதற்கும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் உதவுதல் ;

(vi) சமூகத்தில் பௌத்த ஒழுக்கங்கள், நன்நெறிகளை முன்னேற்றுதல் ;

(vii) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தலும் பரஸ்பர உதவி, புரிந்துணர்வு ஆகியவற்றை வளர்த்தலும் ;

(viii) பௌத்தர்களுக்கு பௌத்த கோட்பாடுகளினூடாக பொருளாதார, கலாசார, சமூக குறிக்கோள்களை நிறைவுசெய்தல் ;

(ix) பௌத்தர்களுக்கு காணி கொள்வனவு செய்தல், வீடு கட்டுதல், சுய தொழில்வாய்ப்பு போன்ற அவசர தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இலகு நியதிகளின் பேரில் அல்லது வட்டி இல்லாமல் கடன்கள் வழங்குதல் ;

(x) பௌத்த சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் நிதிரீதியாக அல்லது வேறுவகையாக அவர்களுக்கு உதவுதல் ;

(xi) புத்த தர்மத்தை உள்நாட்டிலும் உலகளாவிய விதத்திலும் வளர்த்துப் பேணி வளர்ப்பதற்கு உதவி வழங்குதல் ;

(xii) தர்ம அறிவை மேலும் விரிவுபடுத்துவதற்கு தர்மநூல்களை அச்சிடுவதற்கு உதவி வழங்குதல் ;

(xiii) பௌத்த கோவில்கள், தேவாலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உதவி வழங்குவதுடன் அந்த நோக்கத்துக்குப் பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுத்தல்;

(xiv) நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான பிணைப்பொறுப்பாக அவர்களது வீட்டை அல்லது காணியை ஈடாக வைத்துள்ள பௌத்தர்கள் கொடுப்பனவின் தவறுகையின்மேல் அறவீட்டு வழக்கு நடவடிக்கையை முகம்கொடுக்கும்போது அவர்கள் எதிர்நோக்கும் இடர்நிலையைப் போக்குவதற்கு உதவி வழங்குதல் ;

(xv) பௌத்தர்களுக்கு சேமநலனுக்குத் தேவையெனக் கருதப்படக்கூடிய எவையேனும் பிற உதவிகளை வழங்குதல் ;

(xvi) புத்த சாசனத்தின் உயர்வுபொருட்டு ஏதாவது பிற நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தலும், உதவி வழங்குதலும் ;

(xvii) புத்தபிரானுக்கு எதிராகவும் அவரது சித்தாந்தத்துக்கு எதிராகவும் சங்க உறுப்பினர்களுக்கு எதிராகவும் செய்யப்படும் ஏதேனும் தூஷணைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் ;

(xviii) புத்தசாசனத்தின் நிலைபேறு, பேணுகை, அதன் பாதுகாப்பு, அபிவிருத்தி, முன்னேற்றமும் பௌத்த துறவிகள், பௌத்தர் ஆகியோரதும் வழிபாட்டு இடங்களதும் நலன்பொருட்டும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல்;

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4.** கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தினதும் எவையேனும் வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், செயற்படுத்துவதற்கும், மூடவுமான தத்துவமும் பணத்தை பிணையுடன் அல்லது பிணையில்லாமல் கடனாகப் பெறுவதற்கும் மானியங்கள், அன்பளிப்புகள் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதியங்களை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் உத்தியோகத்தர்கள், சேவையாளர்களை ஈடுபடுத்துவதற்கும், பணிக்கமர்த்துவதற்கும், நீக்குவதற்கும் ஆன தத்துவங்கள் உட்பட அவசியமான அல்லது விரும்பத்தக்க அத்தகைய அனைத்து செயல்கள், விடயங்கள், கருமங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஆக்கப்படவேண்டிய விதிகளுக்கும் அமைவாக, இருபத்தொன்பது உறுப்பினர்களைக் கொண்டமைந்த 'ஆளுநர்கள் சபை' ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) அவர்களில்,—

(அ) இருபத்தொரு உறுப்பினர்கள் பொதுச் சபையின் கூட்டம் ஒன்றில் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) பின்வரும் உறுப்பினர்கள் பதவிவழியில் பதவி வகித்தல் வேண்டும் :

(i) சியமோபாலி மகா நிக்காயவைச் சேர்ந்த மல்வத்த பீடம், அஸ்கிரியபீடம் ஆகிய இரு பீடங்களையும் சேர்ந்த அதி வணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர்கள், அமரபுர நிக்காயவின் இலங்கை அமரபுர சங்கசபைத் தலைவர் பதவியை வகிக்கும் அதி வணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர், இலங்கை இராமன்ன மகாநிக்காயவைச் சேர்ந்த அதி வணக்கத்துக் குரிய மகாநாயக்க தேரர் ;

(ii) வித்தியோதய மகா பிரிவெனா, வித்தியாலங்கார பிரிவென, பின்வத்தை சத்தர்மகா பிரிவெனா, பலகல்ல சரஸ்வதி பிரிவெனா ஆகிய நான்கு பிரிவெனாக்களையுஞ் சேர்ந்த விகாராதிபதி நாயக்க தேரர்கள்.

*(3)* ஆளுநர்கள் சபையானது, தலைவர், துணைத் தலைவர், பொருளாளர் ஆகியோரை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும், அத்துடன் அது, அவர்களிடையே பொருத்தமான ஓர் ஆளைச் செயலாளராக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். இச் செயலாளரே கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

*(4)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆளுநர்கள் சபை, இச்சட்டம் ஆரம்பிக்கும் திகதிக்கு உடன் முன்பான திகதியில் பதவி வகிக்கும் மன்றத்தின் முகாமைக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6.** *(1)* கூட்டுத்தாபனமானது காலத்துக்குக்காலம் பொதுக் கூட்டம் எதனிலாவது பிரசன்னமாக இருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளினால் இந்தச் சட்டத்தின் அல்லது ஏதேனும் வேறு எழுத்திலுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வகையில் பின்வரும் விடயங்கள் எல்லாம் அல்லது ஏதாவது ஒன்று பற்றிய விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களின் வகுப்பாக்கம், செலுத்தவேண்டிய உறுப்பாண்மைக் கட்டணம், உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது உறுப்பாண்மையிலிருந்து வெளியேற்றுதல் ;

(ஆ) ஆளுநர்கள் சபையினது பதவிகளை வகிப்பவர்களின் தேர்வு, அவர்களின் தத்துவங்கள், கடமைகள் ;

(இ) பதவிதாங்குநர்களின் தேர்தல், பதவிக்காலம், பதவி விலகல், பதவிகளை வறிதாக்கல், பதவி நீக்கல் ஆகியனவும் அவர்களது தத்துவங்களும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் சேவையாளர்களின் கடமைகளும், பணிகளும் ;

(உ) சபையினது, கூட்டங்களை அழைப்பதிலும் நடாத்துவதிலும் அவதானிக்கவேண்டிய நடைமுறை, அவற்றுக்கான கூட்ட நடப்பெண் அவற்றின் கருமங்களை நடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிதியம் உட்பட சொத்துக்களை நிருவகித்தல், முகாமை செய்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒத்த கூட்டமொன்றில் ஒத்தமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியங்கள்.

**7.** (1) கூட்டுத்தாபனம் தனது சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும். அந்த நிதியம் உள்ளூர், வெளிநாட்டு நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள், உறுப்பினர்கள், உறுப்பினர்கள் அல்லாதோரிடமிருந்து காசாகவோ பொருளாகவோ பெறப்படும் நன்கொடைகள், விருப்பாவணக் கொடைகள், மரணசாதன கையளிப்புகள், அன்பளிப்புக்கள், கொடைகள், உதவுதொகைகள், அல்லது உதவுதொகையிலான கட்டணங்கள் என்ற வகையில் பெறப்படும் சகல பணங்களையும் கொண் டிருத்தல் வேண்டும்.

(2) பெறப்படும் பணங்கள் அனைத்தும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டு ஆளுநர்கள் சபை தீர்மானிக்கக்கூடிய பொருத்தமான விதத்தில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனமானது, அதன் ஆதனங்களை புனருத்தாரனம், அபிவிருத்தி அல்லது சீரமைப்புச் செய்யும் நோக்கத்திற்காக தேய்மான நிதியமொன்றை அல்லது கடனாழ் நிதியமொன்றை தாபிக்கலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் மற்றும் புரிவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செல வினங்களும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசையும் அசையா ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவனக் கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசை வுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக் கவும் சட்டப்படி இயலுமானதாகவும் ஆற்றலுடையதாகவும் இருத் தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையாகக் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கலைப்பின்போது எஞ்சியிருப்ப தான ஆதனம்.*

**9.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிரப்படலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களையொத்த குறிக்கோள்களைக்கொண்டதும் அவற்றின் உறுப் பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளால் தடைசெய்யப்பட் டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறே தேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவகத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத் தின் இலச்சினை.*

**10.** கூட்டுத்தாபனத்தினது இலச்சினையானது தலைவரும் அல்லது துணைத்தலைவரும், செயலாளரும் பிரசன்னமாக இருந்தாலன்றி எந்தச் சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது, அத்துடன் அவர்கள், இருவரும் பிரசன்னமாக இருந்ததற்குச் சான்றாக அவர்களது பெயர்களை ஒப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுகை எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடு வதற்குப் புறம்பானதாதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**11.** (1) கூட்டுத்தாபனம், அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள், கூட்டுத்தாபனத்தின் ஏனைய கொடுக்கல் வாங்கல்களது முறையான கணக்குகளைப் பேணுவித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஆளுநர்கள் சபையினால் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரதும் உரிமைகளைப் பாதுகாத்தல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதாவது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் வேறு எவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்